அ.வ.எண். 81/2020 நாள்: 30.01.2026

வா.சா.1 திரு. சுரேந்திரன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் விவசாயம் செய்யவிடாமல் தடுத்து வருவதால் உறுத்துக் கட்டளை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது விவசாய நிலத்தின் சர்வே நம்பர் என்ன என்றால் 309/10A, 10B, 10C, 10D ஆகும். வழக்கு தாக்கல் செய்யும்போது மேற்படி சர்வே நம்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான், தட்டச்சு செய்யும்போது 309 என்பது 390 ஆக தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது. எந்த வருடம் மேற்ப தவறை திருத்தம் செய்தேன் என்றால் 2025-ல் திருத்தம் செய்தேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கறிஞர் ஆணையர் நியமன மனு திருப்பப்பட்ட பிறகுதான் வழக்குரையில் சர்வே நம்பர் தவறாக உள்ளது என தெரிய வந்து திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

2) நான் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்தை பிரதிவாதிகள்தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தவறு விஜயா, கோகிலா இருவரும்தான் விவசாயம் செய்து வந்தார்கள். தாவா சொத்தை சூலமங்கலம் சாமிநாதன் மகன் இந்திரஜித் என்பவர் மூலமாக 2008 ஆம் ஆண்டு கோகிலா, விஜயா இருவரும் பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துகொடுக்க ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தவிவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் 2008 ஆம் ஆண்டு தாவா சொத்திற்கு குழி ஒன்றிற்கு ரூ.380/-வீதம் 147 குழிக்கு ரூ.55,860/-ஐ பிரதிவாதிகள் மேற்படி கோகிலா, விஜயாவிற்கு கொடுத்துவிட்டு தாவா சொத்தை 2008 ஆம்ஆண்டு முதல் தற்போதுவரை விவசாயம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல, 2019 ஆம் ஆண்டு வில்லங்க சான்று பார்த்தபோது வில்லங்கம் இல்லை என்பதால் நான் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறேன்.

3) 2008 ஆம் ஆண்டு கிரையம் செய்து கொடுப்பதற்காக மேற்படி விஜயா, கோகிலா இருவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தபோது வாரிசு சான்று இல்லை என்பதால் கிரையம் பதிவு செய்யப்படாமல் போனது, அதனால் வாரிசு பெற்று கிரையம் செய்து கொடுப்பதாக உறுதியளித்து சென்ற விவரம் தெரியுமா என்றால் சரியல்ல, 2018 ஆம் ஆண்டு நான் வாரிசு சான்று என்மூலமாக பெறப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Surenthiran

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.01.30 16:41:39 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU